# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2006
# அவுஸ்ரேலியா பட்டதாரிகள் தமிழர் சங்கம்
## Tamil Competition - Australian Society of Graduate Tamils

## விவாதப் போட்டிக்களுக்கான விதிமுறைகளும் விளக்கங்களும்:

1. போதிய குழுக்கள் விண்ணப்பிக்கும் பட்சத்தில் போட்டிகள் அரை இறுதிப் போட்டி, இறுதிப் போட்டி என்ற இருநிலைகளில் இடம் பெறும்.

2 போட்டிக்கான தலைப்புக்கள் போட்டியிடும் குழுவினருக்கு அறிவிக்கப்படும்.

3. இப்போட்டியில் மேற்குறிப்பிட்ட வயதுப்பிரிவுக்குட்பட்ட தகுதியுடைய போட்டியாளர்கள் மும்மூன்று போட்டியாளர்களைக் கொண்ட குழுக்களாக விண்ணப்பிக்க வேண்டும்.

4. போட்டியாளர்கள் விவாதத்தின் போது துணைக்குறிப்புகளைப் பயன்படுத்தலாம். ஆனால் தமது விவாதத்தினை எழுத்துப் பிரதியிலிருந்து வாசிக்கக் கூடாது. எழுத்துப் பிரதியிலிருந்து வாசிக்கும் போட்டியாளர்களுக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.

5. விவாதக் குழுவினைச் சேர்ந்த ஒவ்வொருவருக்கும் தனித் தனியே 5 நிமிடங்கள் கொடுக்கப்படும். 5 நிமிடங்கள் முடிந்ததும் மணி ஒருமுறை அடிக்கப்படும். தொடர்ந்து அவர் பேசினால் 30 வினாடிகளுக்குப் பின் மணி இரு முறை அடிக்கப்படும். இரண்டாவது மணி அடித்தவுடன் அவர் பேச்சை நிறுத்த வேண்டும். 5 நிமிடங்களுக்கு மேலாக பேசுமிடத்தும், 3 நிமிடங்களுக்குக் குறைவாகப் பேசுமிடத்தும் புள்ளிகள் குறைக்கப்படும்.

6. மூன்று போட்டியாளர்களும் பேசி முடிந்த பின் விவாதக் குழவின் தலைவர்கள் ஒவ்வொருவருக்கும் விவாதத்தினை முடித்து தொகுப்புரை வழங்குவதற்கு 3 நிமிடங்கள் கொடுக்கப்படும். ஆதரித்துப் பேசும் குழுவின் தலைவர் விவாதத்தை முடித்து வைப்பார்.

7. விவாதத்தில் கவனிக்கப்படும அம்சங்கள் + புள்ளிகள் வழங்கப்படும் விபரங்கள்:
    - ❖ தான் சார்ந்த அணிக்கு ஆதரவாக முன்வைக்கும் கருத்துக்களும், அவற்றின் தரமும்
    - ❖ எதிர் அணியினர் கூறிய கருத்துக்களுக்கு மறுத்துக் கூறும் கருத்துக்களும், அவற்றின் தரமும்
    - ❖ தேவை ஏற்படின் தன் அணி ஏற்கனவே முன்வைத்த கருத்தை மீண்டும் வலியுறுத்திக் கூறலாம். ஆனால் தேவையற்ற சந்தர்ப்பத்தில் தன் அணி ஏற்கனவே முன்வைத்த கருத்தை மீண்டும் கூறுவதால் எவ்வித மேலதிக புள்ளிகளும் கிடைக்கமாட்டாது.
    - ❖ அணியின் தலைவரின் தொகுப்புரையில் ஏற்கனவே தன் அணி முன்வைத்த கருத்துகளின் சாராம்சத்தை வழங்கவேண்டும். அத்துடன் தாம் மறுத்துக் கூறிய கருத்துக்களையும் தொகுத்து வழங்குவதன் மூலம், தமது அணியின் கருத்து-பேச்சு வன்மையை நிலை நிறுத்த வேண்டும்.
    - ❖ விவாதக் களத்தில் தலைப்போடு ஒன்றிய விடயங்களே பேசப்படவேண்டும். வாதியையோ, பிரதிவாதியையோ தனிப்பட்ட முறையில் சாடுவதையும், அவரவர் தனிப்பட்ட விடயங்களைப் பற்றிப் பேசுவதையும் தவிர்க்கவேண்டும்.

8. விவாதக் குழுக்கள் எந்தெந்தத் தரப்பில் வாதிடுவர் என்பது சீட்டிழுப்பின் மூலம் தீர்மானிக்கப்படும். அரை இறுதிப் போட்டிகள் மூலம் இறுதிப்போட்டிக்கு பங்குபற்றத் தகுதி உடைய குழுக்கள் தேர்ந்தெடுக்கப்படும். அரை இறுதிப் போட்டி முடிவடைந்ததும் இறுதிப் போட்டிக்கான தலைப்புக் கொடுக்கப்படுவதுடன் விவாதத்தை ஆதரித்து, எதிர்த்து பேசுவதற்கான ஒழுங்கு, சீட்டிழுப்பின் மூலம் தீர்மானிக்கப்படும்.

9. ஒவ்வொரு வயதுப்பிரிவிலும் இறுதிப் போட்டியில் பங்குபற்றி சிறந்ததெனத் தெரிந்தெடுக்கப்படும் குழுவிற்கு முதல் பரிசும் அடுத்த குழுவிற்கு ஆறுதல் பரிசும் வழங்கப்படும்.

10. போட்டிகளுக்கான பொது விதிமுறைகள்:

- நீங்கள் பங்குபற்றும் போட்டிகள் பற்றிய விபரங்களையும், போட்டிகளின் நேர அட்டவணையையும் ஏற்கனவே உங்களுக்கு அனுப்பி வைத்துள்ளோம். உங்கள் விண்ணப்பம் முழுமை பெறாவிட்டால் எம்முடன் தொடர்பு கொண்டு விண்ணப்பத்தை பூர்த்தி செய்யவும். நீங்கள் எங்களுடன் 10/07/06ற்கு முன்னர் தொடர்பு கொள்ளாதபட்சத்தில், நீங்கள் போட்டியில் தோற்றும் தகுதியை இழக்கின்றீர்கள்.
- போட்டி ஆரம்ப நேரத்திற்கு அரைமணி நேரத்திற்கு முன்பாக மண்டபத்திற்கு வரவேண்டும்.
- விண்ணப்பக் கட்டணத்தை($5.00) முன்கூட்டியே செலுத்தி அசௌகரிகத்தை குறைக்கவும்.
- உங்கள் மின்னஞ்சல் விபரத்தை ஏற்கனவே தராவிடின், தயவு செய்து அனுப்பி விடவும்.
- மேலதிக விபரங்களுக்கு போட்டிகளுக்குரிய முழுமையான எமது விதிமுறைகளை வாசிக்கவும் அல்லது எம்முடன் கீழுள்ள வழிகளில் தொடர்பு கொள்ளலாம்.
- போட்டி விதிமுறைகளை மீறும் போட்டியாளர் அந்தந்தப் போட்டியிலிருந்து விலக்கப்படுவார்.
- எமது பரீட்சை சபையின் (Board of Examiners) தீர்ப்பே இறுதியானது என்பதையும் அறியத்தருகின்றோம்.

தமிழ் ஊக்குவிப்புப் குழு
அவுஸ்ரேலியா பட்டதாரிகள் தமிழர் சங்கம்

மேலதிக விபரங்களுக்கு: Email: tamilcomp@yahoo.com Web: www.unifundproject.org
Tele: 0433 088 725 or 02-9758 7970